**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**
**<u>அ.வ.எண். 102/2018</u>**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30–** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 30.07.2025**

**பெயர் – ரங்கநாதன்**

**த/பெ – கிருஷ்டப்பநாயக்கர்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.21.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

9. இந்த வழக்கு சொத்து புறம்போக்கு நிலம் இல்லை என்றால் சரிதான். ஆனால் நத்தம் வகைபாடு. நத்தம் வகைபாடு என்றாலும் சிட்டாவில் யார் அனுபவத்தில் உள்ளது என்ற குறிப்பு இருக்கும் என்றால் இருந்தால் இருக்கலாம். என்படி இந்த சொத்து சீத்ம்மாளிடம் இருந்து வாங்கிய சொத்து என்றால் சரிதான். சீத்தம்மாளுக்கு இந்த சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று கூறவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் சீத்தம்மாளுக்கு இந்த சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

10. சீத்தம்மாளுக்கு இந்த சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தை நானோ, சீத்தம்மாளோ அனுபவிப்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், காலிமனையாக இருப்பதால் வரி எதுவும் இல்லை. நத்தம் நிலமாக இருந்தால் கூட நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வரி விதித்தார்கள் அதன்படி வரி கட்டியிருக்க வேண்டும் என்று சொன்னாலும் வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் நான் வரி கட்டவில்லை என்று கூறினால் வரி வசூல் செய்யவில்லை, நான் தான் அனுபவித்த வருகிறேன்.

11. எதிர் தரப்பில் தட்ஷணாமூர்த்தி என்பவர் தாக்கல் செய்த பதிலுரையில் 24.04.1930 ல் கிரையம் வாங்கியதாக எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 11–ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிடவில்லை. தற்போது பாலாச்சாரி மற்றும் குப்பாச்சாரியும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். 1 ஏக்கரா 44 செண்ட்–ல் 28 செண்ட் முன்பே கிரையம் கொடுத்துவிட்டார் என்றும் மீதி நிலத்தை தான் அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

12. பாலாச்சாரி இறந்த பின் 1 ஏக்கரா 44 செண்ட் – ஐ பாலாச்சாரியின் வாரிசுகளான குப்பாச்சாரி, அமராவதி, பிரபாவதி ஆகியோரே இந்த சொத்திற்கு அவர்கள் தான் உரிமையாளர்கள் என்று கூறினால் சரியல்ல. அந்த பத்திரங்கள் செல்லாது என்று எந்த

வழக்கும் போடவில்லை, இந்த வழக்கிலும் கோரவில்லை என்றால் சொத்தை நான் கையாண்டு கொண்டு இருப்பதால் போடவில்லை. எதிர் தரப்பில் சொத்து தனக்கு உரிமையான சொத்து என்று ஒரு பதில் தாக்கல் செய்தால் நான் அந்த பத்திரங்களை செல்லாது என கூறி விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டுமே தவிர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

13. 5 வருடங்களுக்கு முன்பு எனது மனைவி பெயரில் இந்த வழக்கு சம்பந்தமான சொத்தினை கிரையம் செய்துவிட்டேன் என்றால் சரிதான். கிரையத் தொகை எதுவும் எனது மனைவி கொடுக்கவில்லை, கணவன் மனைவி என்பதால் பத்திரம் மட்டும் செய்து கொண்டோம். என்படி சொத்து என் மனைவியின் அனுபவத்தில் தான் உள்ளது. சொத்து எனது மனைவியின் பெயரில் உள்ளதாக சொல்லும் நிலையில் இந்த வழக்கினை நான் நிலை நிறுத்த முடியாது என்றும் தேவைப்பட்டால் எனது மனவைி தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

14. நானோ எனது மனைவியோ எந்த காலகட்டத்திலும் அனுபவத்தில் இல்லை என்றும், குறுக்காக பத்திரங்கள் ஏற்படுத்தி இதுபோன்ற வழக்கு தாக்கல் செய்தால் எதிர்வாதியிடம் இருந்து பணம் பரிக்கலாம் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. முந்தைய குறுக்கு விசாரணையில் வழக்கு சொத்திற்கான அசல் பத்திரத்தை தாக்கல் செய்வதாக குறிப்பிட்டுள்ள நிலையில் தற்போது எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து எனக்கு சொந்தம் இல்லை என்பதால் தான் அசல் பத்திரங்களை வைத்திருக்கவில்லை என்றும் அதனால் தான் இன்று கொண்டு வரவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு எந்த நியாயமும் இல்லை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.48.p.m.**